நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42 ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

C.C.No.456/2022

<u>அ.த.சா: 5 சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரபீக்ராஜா | சாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

06-09-2024 நாளன்று 1969 ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

(எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டார்.)

<u>முதல் விசாரணை:</u>

நான் தேனி அன்னஞ்சி பள்ளிவாசல் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் கறிக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன், தமிழில் கையொப்பம் செய்வது வழக்கம். என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். கடந்த 23.12.2020 அன்று மதியவேளையில் தேனி அல்லிநகர போலீசார் பள்ளிவாசல் தெருவில் விசாரணை செய்தார்கள். போலீசார் சண்டை நடந்த விபரத்தை பற்றி கேட்டார்கள், விபரத்தை சொன்னேன். அப்போது பார்வைமகஜரில் நான் கையொப்பம் செய்தேன். பார்வைமகஜர் அ.சா.ஆ-2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னுடன் சேர்ந்து அந்த பார்வைமகஜரில் ஆரிப்ராஜா என்பவர் கையொப்பம் செய்தார். இது சம்பந்தமாக போலீசார் விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u> -

பள்ளிவாசல் தெருவில் உள்ள நான் குடியிருக்கும் வீட்டில் வந்து போலீசார் விசாரித்தார்கள். நான் குடியிருக்கும் வீட்டிற்கும், சம்பவ இடத்திற்கும் இரண்டு கி.மீ. தூரம் இருக்கும். வீட்டில் வந்து போலீசார் கையெழுத்து வாங்கியதில் என்ன எழுதியிருந்தது என்று

எனக்கு தெரியாது. சம்பவ இடத்திற்கு நான் போகவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடம் ஜமாத்திற்கும், வக்பு வாரியத்திற்கும் பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணத்தை நான் பார்த்ததில்லை. எதிரிக்கு சம்பவ இடத்திற்கு அருகில் இடம் இருக்கிறது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் நாங்கள் சாமி கும்பிடுவதற்கான ஒரு கபர்ஸ்தான் உள்ளது என்றால் சரிதான். எங்கள் மதத்தை சேர்ந்தவர்கள் அந்த இடத்திற்கு சாமி கும்பிடுவதற்கு செல்வார்கள் என்றால் சரிதான். புனிதமான அந்த இடத்தை சுடுகாடு ஆக்ககூடாது என்று ஊர்மக்கள் சொல்லியும் நான் கேட்கவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. வீட்டில் வைத்து நான் பார்வைமகஜரில் கையொப்பம் செய்ததால் எனது சாட்சியம் செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.

*Taken down by me/before me in open Court,*
*interpreted/read over to the witness and*
*admitted by the deponent to be correct.*

K KAVITHA
Digitally signed by K KAVITHA
Date: 2024.09.06 17:16:55 +0530

Chief Judicial Magistrate,
Theni.